

# விசுவாசம் உடையவராய் இருத்தல்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** மாற்கு 8:11,12; மத் 15:21–28; லூக் 7:1–10; எபே 2:8; எபி 11; வெளி 14:12.

**மனன வசனம்:** விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. எபி 11:1.

'நம்பிக்கை வைஃபை போன்றது. அது கண்ணுக்குத் தெரியாது, ஆனால் நீங்கள் இணைக்கப்பட வேண்டியதோடு இணைக்கிற ஆற்றல் அதற்கு உண்டு' என்று சொல்வார்கள். ஆம், விசுவாசமில்லாமல் தேவனோடு எவ்வித உறவும் வைக்கமுடியாது. இன்று உங்கள் விசுவாசம் எப்படி இருக்கிறது? தேவன்மீதான உங்கள் விசுவாசம் தடுமாற்றமாக இருந்திருக்கிறதா? தேவனோடுள்ள உங்கள் உறவில் மேற்கொண்டு எப்படி முன்னேறுவது என்று தெரியாத அளவிற்கு, உங்களைச் சவாலுக்கு உட்படுத்துகிற ஒரு விஷயத்தை நீங்கள் அனுபவித்திருக்கலாம். அல்லது உங்கள் விசுவாசம் ஒரு ரோஜா மலரைப்போன்று இருக்கிறதா? அது ஒரு பச்சைத் தண்டிலிருந்து வளர்ந்து, சிறு மொட்டாக மாறி, இறுதியில் அழகான, வண்ணமயமான மலராக மலர்ந்து, அந்த அறை முழுவதையும் மறக்கமுடியாத நறுமணத்தால் நிரப்புகிறதா? மெய்யாகவே 'விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது' எபி 11:1. அதை நாமே நமக்குள்ளாக உருவாக்கமுடியாது; ஏனென்றால் 'அவனவனுக்கு, தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே' உருவாகிறது. ரோமர் 12:3 விசுவாசம் தேவனடைய ஓர் ஈவு. எபே 2:8,9. தேவனில் நாம் வைத்திருக்கிற விசுவாசம், தேவன் ஏற்கனவே நம்மிலும் நமக்காகவும் செய்திருப்பவற்றை வைத்தே சாத்தியமாகிறது.

இந்தவாரம்விசுவாசம்பற்றி ஆராய்வோம்: சந்தேகம், அவநம்பிக்கையைக் கையாளும் விதம், உறுதியான விசுவாசம் பற்றி இயேசு சொல்வது, 'இயேசுவின் விசுவாசத்தைப் பெற்றிருப்பது' என்பதின் அர்த்தம் ஆகியவற்றை ஆராய்வோம்.

*2026, மே 23 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# அடையாளம் காண்பியும்!

'செங்கடல் பிளந்ததையும், மன்னா தரையில் பொழிந்ததையும் அல்லது இயேசு ஒரு குருடனைக் குணமாக்கினதையும் நான் பார்த்திருந்தால் விசுவாசித்திருப்பேன்' என்று யாராவது பேசக்கேட்டிருப்பீர்கள். அல்லது உங்களுக்கேகூட அப்படிப்பட்ட சிந்தனைகள் எழுந்திருக்கலாம்.

பண்டைய வேதாகமக் காலங்களில் வாழ்ந்தவர்களைவிட இன்று நாம் விசுவாசத்தைப் பெற்றிருப்பது ஏன் எளிதாக இருக்கவேண்டும்? இஸ்ரவேலருக்கு முழு வேதாகமமும் கிடைத்திருக்கவில்லை, இன்று நாம் வாசிப்பதுபோல முழுவரலாற்றையும்வாசிக்கிறவசதிஇல்லை.தேவனுடையவழிநடத்துதலையும் தயவையும் நினைவுகூருவதற்கு வரலாற்றைத் திரும்பிப்பார்ப்பது முக்கியமென மோசே வலியுறுத்தினார். உபா 4:7-10; 8:2,3. வேதாகமத்தில் 6000 வருட வரலாற்றை வாசிக்க இன்று நமக்குக் கிடைத்திருக்கிற வசதி இஸ்ரவேலர்களுக்குக் கிடைக்கவில்லை. யோவான் 20:30,31.

ஒவ்வொரு தலைமுறையினரும் ஏதாவது அடையாளத்தை விரும்புகிறார்கள், நம் தலைமுறையினரும் விதிவிலக்கல்ல. மத் 24இல், பல காரியங்கள் ஏற்கனவே நிறைவேறியிருப்பதையும், இப்போதும் நிறைவேறிக்கொண்டிருப்பதையும் காணலாம்.

**இயேசுவின் காலத்திலும்கூட, மக்கள் அநேக அடையாளங்களைப் பெற்றிருந்தபோதும், இயேசு மெய்யாகவே தேவ குமாரன்தான் என்பதற்கு ஓர் அடையாளத்தை விரும்பினார்கள். அதற்கு இயேசு சொன்ன பதில் என்ன? மாற்கு 8:11,12.**

நாம் இயேசுவுடன் வாக்குவாதம்பண்ணி, பரிசேயர்கள் அவரைச் சோதித்ததுபோல நடக்கவேண்டுமா? நாம் நம்புவதற்கு அனைத்தையும் ஏற்கனவே கொடுத்திருக்கிற நிலையில், நம் விசுவாசக் குறைச்சலின்நிமித்தம் அவர் 'தம்முடைய ஆவியில் பெருமூச்சு' விடும்படி செய்யவேண்டுமா? மாற்கு 8:12.

'யூதர்களுக்கு இந்த அடையாளங்கள் தேவையாக இருக்கவில்லை. வெறும் வெளிப்புற அடையாளங்கள்மட்டும் அவர்களுக்குப் பயனளிக்காது. அவர்களுக்குத் தேவைப்பட்டது அறிவுப்பூர்வமான விளக்கம் அல்ல, மாறாக ஆவிக்குரிய புதுப்பித்தல் ஆகும்.' நமக்கும்கூட தேவனோடு உண்மையான, ஒவ்வொரு கணமும் அவரோடு நடக்கிற ஆவிக்குரிய புதுப்பித்தல் அவசியமாக இருக்கிறதா? நமக்கு எந்த அடையாளமும் தேவைப்படாமல் இருக்கலாம், ஏனென்றால் நம் வேதாகமத்தில் இருந்துதானே ஏராளமான அறிவை நாம் பெறமுடிகிறது.

எனவே, நம் விசுவாசக் குறைச்சல்நிமித்தம் இயேசு 'பெருமூச்சு' விடுவதற்கு வழிவகுக்காமல், தோமாவிடம் அவர் சொன்ன வார்த்தைகளை ஞாபகத்தில் வைத்திருப்பது நல்லது: 'காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்!' யோவான் 20:29; எபி 11:1. நாம் குருட்டுத்தனமாக விசுவாசிக்குமாறு தேவன் சொல்லவில்லை, நாம் விசுவாசிப்பதற்கு ஏராளமான காரணங்களை அவர் ஏற்கனவே கொடுத்திருக்கிறார். இவ்வளவு காரணங்கள் இருந்தாலும், சந்தேகம் எழுவதற்கு வாய்ப்பிருக்கிறது. எனவே, சந்தேகத்தை உருவாக்குகிற விஷயங்களில் கவனம் செலுத்தாமல், அதை உறுதிப்படுத்துகிற விஷயங்களில் கவனம் செலுத்துவது முக்கியம்.

தேவனில் நீங்கள் வைத்திருக்கிற விசுவாசத்தை 60 விநாடிகளில் எவ்வாறு விளக்குவீர்கள்? தேவனோடுள்ள உங்கள் அனுபவம்பற்றி உங்கள் பதில் சொல்வது என்ன?

# இயேசு நம் விசுவாசத்தைப் பார்க்கிறார்

**மாற்கு 4:40-ல் இயேசு தமது சீடர்களின் விசுவாசத்தையும், மத்தேயு 15:21–28-ல் அந்தப் பெண்ணின் விசுவாசத்தையும் விவரிப்பதை ஒப்பிட்டுப் பாருங்கள்.**

---

இயேசுவைப் பின்பற்றுகிறோம் என்று சொல்வதால்மட்டுமே நம் விசுவாசம் வலுவானது என்று அர்த்தமல்ல. தாங்கள் விசுவாசிப்பதாகச் சொன்ன சிலருடைய இருதயங்களின் உண்மையான நிலையை இயேசுவால் பகுத்தறிய முடிந்தது. யோவான் 2:23-25.

**லூக் 7:1-10இன் சம்பவத்திலிருந்து விசுவாசம்பற்றி என்ன அறிந்துகொள்கிறோம்?**

---

தன் மகனைப் பிடித்திருந்த பிசாசை விரட்டும்படிக்கு இயேசுவிடம் வந்த மனிதனைப்பற்றி மாற்கு 9ல் வாசிக்கிறோம்; அவனிடம், ‘விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும்’ என்று சொல்ல முடிந்த விசுவாசம் மட்டும்தான் காணப்பட்டது. மாற்கு 9:24.

இந்தச் சம்பவங்கள் ஒவ்வொன்றிலும், மக்களுடைய விசுவாசத்தை அல்லது விசுவாசமின்மையை இயேசு கவனித்தார், அந்த விசுவாசத்தின்நிமித்தம் அல்லது அதைப் பெலப்படுத்துவதற்கு அற்புதங்களைச் செய்தார்.

ஆவியானவர் நம்மை விசுவாசிக்கும்படி தூண்டினாலும், ஆத்துமாக்களின் எதிரியானவன், நாம் சந்தேகப்படவேண்டும் அல்லது நம் வாழ்வில் தேவன் செய்யும் காரியங்களை அலட்சியப்படுத்த வேண்டும் என்றே விரும்புகிறான். ஆத்துமாவில் போற்றி வளர்க்கப்படும் அவிசுவாசம், புத்தியை மழுங்கச் செய்கிற ஆற்றல் உடையது. அவர்கள் விதைத்து வருகிற சந்தேகத்தின் விதைகள் அதன் அறுவடையைத் தரும்; ஆனால், அவர்கள் அவிசுவாசத்தின் ஒவ்வொரு வேரையும் தோண்டி எடுப்பதைத் தொடரவேண்டும். இந்த நச்சுச் செடிகள் பிடுங்கி எறியப்படும்போது, வார்த்தையிலும் செயலிலும் அவற்றுக்குத் தேவையான ஊட்டம் கிடைக்காததால் அவை வளர்வதை நிறுத்திவிடும். ஆத்துமாவில், விசுவாசம் மற்றும் அன்பு என்னும் விலைமதிப்பற்ற செடிகள் இருதயமாகிய நிலத்தில் நடப்பட்டு, அவை அங்கே ஆழமாக வேரிட்டிருக்க வேண்டும்.

தேவனையும், அவரது குணத்தையும், அவரது வார்த்தையையும்பற்றி சந்தேகம் இருந்தால் என்ன செய்யவேண்டும்? தேவன் மனித பகுத்தறிவை அலட்சியப்படுத்துவதுமில்லை, அல்லது அதைத் தவிர்த்துவிட்டுச் செயல்படுவதுமில்லை; ஏனெனில் அவர் நம்மைத் தமது சாயலிலேயே படைத்திருக்கிறார். ஆபிரகாம், மோசே மற்றும் யோபு ஆகியோரோடு அவர் உரையாடியதுபோல, நம்மையும் தம்முடன் கலந்துரையாட அழைக்கிறார். நாம் முழுமையாகப் புரிந்துகொள்ளமுடியாத சில விஷயங்களை அப்படியே ஏற்றுக்கொள்ளவேண்டிய கட்டாயம் ஏற்பட்டாலும், தேவனுடைய விசாலமான, எல்லையற்ற அறிவுப்பூர்வமான திட்டங்களுக்கு இசைவாகச் செயல்படும்படி நம்மை அழைக்கிறார்.

---

**உங்கள் விசுவாசத்திற்கு ஆதாரமாக இருக்கும் பகுத்தறிவான காரணங்களை எல்லாம் சிந்தித்துப் பாருங்கள். அதே நேரத்தில், எந்தப் புள்ளியில் பகுத்தறிவுக்கு விடைகொடுத்து, உறுதியான மற்றும் நியாயமான விசுவாசத்தைச் செயல்பட அனுமதிக்க வேண்டியுள்ளது?**

# விசுவாசம் என்பது ஓர் உணர்வல்ல

கடுகளவு விசுவாசம் இருந்தால்கூட மலைகளை அசைக்கமுடியும் என்று இயேசு சொன்னார். மத் 17:20. கடுகு விதை மிகமிகச் சிறியது. ஆனால் அந்த அளவு விசுவாசம்கூட மிகப்பெரிய மாற்றத்தை உண்டாக்கமுடியும். எனவே, விசுவாசம் மிகமுக்கியமானது, மனித பெலத்திற்கு அப்பாற்பட்டதைச் செய்கிற அளவுக்கு ஆற்றலும் பெலமுமுள்ளது. ஆனாலும் ஒரு கடுகு விதையால் மிகப் பெரிய செடியாக வளரமுடிவதுபோல, நம் விசுவாசமும் ஒரே அளவில் இருக்காமல் வளரவேண்டும். மத் 13:31,32.

**முதலாவது தேவனோடு ஒரு உறவை ஏற்படுத்திக்கொள்வதற்கு நமக்கு ஒரு குறிப்பிட்ட அளவு விசுவாசம் தேவைப்படுகிறது. ரோமர் 12:3.**

இரட்சிக்கப்படுவதில் விசுவாசத்தின் பங்குபற்றி எபே 2:8 என்ன சொல்கிறது? 'தேவன் எனக்கு விசுவாசத்தைக் கொடுக்காததால் நான் அதைப் பெறவில்லை' என்று ஏன் எவருமே சொல்லமுடியாது?

விசுவாசம் என்பது ஒரு திடப்பொருள் அல்ல; அது ஆவியானவருடைய தூண்டுதலால் மனிதர்களிடம் உண்டாகிற பிரதிவினை. தேவனே அதைக் கிருபையாகத்துவங்குகிறார். நாம் அவரை அனுமதிக்கும்போது பரிசுத்த ஆவியானவர்மூலம் நம்மைத் தம்மிடம் இழுத்துக்கொள்கிறார். எரே 31:3. இயேசுவின் மரணத்தின்மூலம் நமக்கு அளிக்கப்பட்ட தேவ கிருபைக்கு நாம் காட்டுகிற பிரதிவினையே விசுவாசம்; அந்த விசுவாசத்தின் மூலமாகவே, கிருபையினால் நாம் இரட்சிக்கப்படுகிறோம். அவருடைய கிருபையின் விளைவாக நாம் தேவனை நம்புவதால், இரட்சிப்பைப் பெறுகிறோம். அவரோடு ஒரு உறவைக் கொண்டிருப்பதன் மையக்கருத்தே இதுதான்.

அடுத்து, விசுவாசம் என்பது ஓர் உணர்வல்ல என்பதையும் நினைவில் வைத்திருக்கவேண்டும். 'விசுவாசத்தைச் செயல்படுத்த வேண்டியது தங்களுடைய சிலாக்கியமாகவும் கடமையாகவும் இருந்தும், பலர் அதைச் செய்வதில்லை. விசுவாசத்தினால்மட்டுமே கிடைக்கக்கூடிய உணர்ச்சிகளுக்காக அவர்கள் காத்திருக்கிறார்கள். விசுவாசம் உணர்ச்சிகளால் அமைந்ததல்ல. . . . விசுவாசத்தைச் செயல்படுத்துவது நம்முடைய பொறுப்பு; ஆனால் மகிழ்ச்சியான உணர்வையும் ஆசீர்வாதத்தையும் கொடுக்கவேண்டியது தேவன்'.

சிலர் தாங்கள் தேவனுக்கு நெருக்கமாக இருப்பதாக உணரவில்லை என்றால் அல்லது ஒரு கிறிஸ்தவராக தாங்கள் இருக்கவேண்டிய நிலையில் இல்லை என்று கருதினால், தங்களிடம் விசுவாசம் இல்லை என்று நினைக்கலாம். ஆனால் விசுவாசம் என்பது நல்ல காலங்களில்மட்டும் அல்ல, இருள்போன்ற அல்லது புயல்போன்ற காலங்களிலும், ஏன், உங்கள் வாழ்க்கையில் என்ன நடக்கிறது என்று உங்களால் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாத நேரங்களிலும் அவரை நம்புவதும் சார்ந்து இருப்பதுமே உண்மையான விசுவாசம்.

நம் ஆவிக்குரிய அனுபவத்தில் அல்லது தேவனோடுள்ள உறவில் உணர்வுகள் ஆதிக்கம் செலுத்தக்கூடாது. நாம் தேவனைவிட்டுத் தூரமாக இருப்பதுபோல நினைக்கிற சமயத்தில்தான் நம் விசுவாசத்தைச் செயல்படுத்த வேண்டும், அவரை நோக்கிக் கூப்பிடவேண்டும். (மாற்கு 9:24இல் அந்தத் தகப்பன் கூப்பிட்டதுபோல).

---

**தேவனோடுள்ள உறவை உறுதிப்படுத்த, விசுவாசத்தோடு அறிக்கைசெய்யவேண்டிய சில முக்கியமான வேதாகம வாக்குறுதிகள் இதோ: எபி 12:1,2; 2நாளா 15:7; ரோமர் 3:23-26; லூக் 7:50. நீங்கள் ஜெபிக்கும்போது இவற்றைச் சத்தமாகச் சொல்லி ஜெபியுங்கள்.**

# விசுவாசத்திற்கு உதாரணங்கள்

**விசுவாச அதிகாரமான எபி 11ஐ இன்று வாசியுங்கள். முதலில் சத்தமாக, நிறுத்தாமல் வாசியுங்கள். பிறகு இரண்டாவது முறை வாசித்து, பின்வரும் கேள்விகளுக்கு உங்களுடைய எண்ணங்களை எழுதுங்கள்:**

- 1ஆம் வசனத்தை வாசிக்கவும்: இன்னும் காணமுடியாத எதை நோக்கி இன்று காத்திருக்கிறீர்கள்? (உடனடி தேவைகளையும் நித்திய எதிர்பார்ப்புகளையும் யோசியுங்கள்).
- உங்கள் தனிப்பட்ட சாட்சியிலும், உரையாடலிலும் விசுவாசம் என்ன பங்காற்றுகிறது?
- தேவனையும் சிருஷ்டிப்பையும்பற்றிச் சொல்கிற 3ம் வசனத்தை மீண்டும் வாசியுங்கள். பல வழிகளில் பார்க்கும்போது, சிருஷ்டிகராகிய ஒரு தேவன் இருக்கிறார் என்பதை விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்வது ஏன் மிகவும் எளிதான ஒரு காரியமாக இருக்கவேண்டும்?
- 6ம் வசனத்தை வாசித்து, அதன் செய்தியை உங்கள் சொந்த வார்த்தைகளில் எழுதுங்கள்.
- 7 முதல் 40 வரையிலான வசனங்கள் பல்வேறு வேதாகம மாந்தர்களின் வாழ்க்கையை விவரிக்கின்றன. இந்த நபர்களுக்கும் தேவனுக்கும் இடையிலான உறவின் பலத்தைத் தீர்மானிக்கும் மையக்காரணியாக விசுவாசம் ஏன் இருக்கிறது?

தேவனை அறிவதற்கும், அவருடன் உயிருள்ள, வலுவான உறவு வைத்திருப்பதற்கும் விசுவாசம் தேவை. உங்கள் விசுவாசத்தைப் பெலப்படுத்த அல்லது விசுவாசத்தில் தடுமாறிக் கொண்டிருக்கிற ஒருவரை ஊக்கப்படுத்த நீங்கள் என்ன செய்யலாம்? ஒரு சில கருத்துகள் இங்கே:

**கடுகு விதைபோன்ற சிறிதளவு விசுவாசம்கூட ஆற்றல்மிக்கது, தேவனோடுள்ள உறவில் வளருவதற்கு முற்றிலும் அவசியமானது.** மத் 17:20. அவருடன் சேர்ந்து வேலை செய்ய நீங்கள் ஆயத்தமாக இருக்கிற வரையிலும் உங்கள் விசுவாசம் வளர அவர் உதவுவார். **தம்முடைய வார்த்தையான வேதாகமத்தில் தேவன் பேசுவதைக் கேட்பதால் விசுவாசம் வருகிறது.** ரோமர் 10:17. தினமும் வேதம் வாசிக்கவும், ஜெபிக்கவும் உங்களை அர்ப்பணியுங்கள். **தேவன் உங்கள் விசுவாசத்தை அதிகரிக்கும்படி கேளுங்கள்.** லூக் 17:5. பிசாசு பிடித்திருந்த தன் மகனைக் குணமாக்கும்படி இயேசுவிடம் வந்து, 'ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும்' என்று சத்தமாகக் கேட்ட அந்தத் தகப் பனைப்போல, நம் அவிசுவாசத்தை உணர்ந்து, அதை அதிகரிக்கும்படி தேவ னிடம் கேட்கலாம். மாற்கு 9:24.

**விசுவாசமும் சந்தேகமும் சேர்ந்து காணப்பட வாய்ப்புள்ளது.** மாற்கு 9:24. உங்களிடம் கேள்விகள் இருப்பதால் தேவனைவிட்டு விலகிவிட வேண்டாம். பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்களுடைய இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்பட வேண்டியதும் (பிலி 2:12-16), மற்றவர்களிடமிருந்து கடன் வாங்காமல், 'சொந்தமாக' விசுவாசம் உள்ளவர்களாகக் காணப்படவேண்டியதும் அவசியம். மத் 25:8.

**பரிசுத்த ஆவியானவருக்கு இடங்கொடுத்து, உங்கள் வாழ்க்கையில் அவர் இன்னும் அதிகமாய் நிரப்பப்பட அவரிடம் கேளுங்கள்.**

**உங்கள் விசுவாசத்தைச் செயல்படுத்துங்கள். விசுவாசம் என்பது ஓர் உணர்வல்ல, அது நம்புவதற்கென எடுக்கப்படுகிற ஒரு தீர்மானம்.** இருளில், தேவனை உங்களால் பார்க்கமுடியாத நேரங்களிலும், அவர் அங்கேதான் இருக்கிறார் என்பதை மறந்துவிடவேண்டாம். 2கொரி 5:7.

**தேவனுடைய உண்மைத்தன்மைக்காக அவருக்கு நன்றிசெலுத்தும் ஒரு தனிப்பட்ட ஜெபமாக,** 'நீர் உண்மையுள்ளவர்' என்கிற புகழ்பெற்ற பாடலின் வரிகளைச் சிந்தித்துப் பாருங்கள்.

# இயேசுவின் விசுவாசம்

உலகம் முடிவை நோக்கிச் செல்கிற இந்நாட்களில், தேவமக்கள் அவரது கற்பனைகளைக் கைக்கொள்வார்கள் என்றும், இயேசுவின் விசுவாசத்தை உடையவர்களாக இருப்பார்கள் என்றும் முத்தூதின் ஒரு தூது அறிவிக்கிறது.

**'இயேசுவின் விசுவாசம்' என்றால் என்ன? வெளி 14:12.**

விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல்பற்றி செவந்த்-டே அட்வென்டிஸ்ட்டுகளிடம் காணப்படுகிற புரிதலை ஆய்வுசெய்தால், 1890-களில், இயேசுவின் விசுவாசம்பற்றியும், மூன்று தூதர்களின் செய்திகள்பற்றியும் புரிதல் அவசியமென்று சபையில் பெரிதும் வலியுறுத்தப்பட்டது. அதுவரை, கற்பனைக்கு நம் சபை அதிக முக்கியத்துவம் கொடுத்து வந்தது; சுவிசேஷத்தை வலியுறுத்த வேண்டிய அவசியம் தேவைப்பட்டது. எலன் ஒய்ட் அதைச் சிறப்பாகச் சுருக்கமாகக் கூறுகிறார்: 'தேவனுடைய கற்பனைகள்பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது; ஆனால், இயேசுவின் விசுவாசமும் கற்பனைகளுக்கு இணையான முக்கியத்துவம் வாய்ந்தது என்று செவந்த்-டே அட்வென்டிஸ்ட்டுகள் இதுவரை அறிவிக்கவில்லை. உண்மையில், கற்பனைகளும் சுவிசேஷமும் ஒன்றோடொன்று கைகோர்த்துச் செல்ல வேண்டியவை.'

அதிக விசுவாசத்தை வெளிப்படுத்திய தேவபக்தியுள்ள ஆண்களையும் பெண்களையும் எபி 11 பட்டியலிட்டாலும், இயேசுவின் விசுவாசத்திற்கு ஈடாக யாருடைய விசுவாசமும் இருந்ததில்லை.

**மத் 26:36–42 இல், அந்த இக்கட்டான தருணத்தில், இயேசுவின் விசுவாசம்பற்றி என்ன சொல்லப்படுகிறது?**

நாம் இயேசுவின் விசுவாசத்தைப் பெற்றிருந்தால், இயேசுவுக்கும் அவருடைய வார்த்தைக்கும் கீழ்ப்படிவதன்மூலம், அவர் பிதாவினிடத்தில் கொண்டிருந்த அதே விசுவாசத்தை நாமும் பின்பற்றுவோம்; மேலும், இயேசுவோடு ஒவ்வொரு நாளும் ஒரு துடிப்பான மற்றும் உயிருள்ள அனுபவத்தைப் பெற்றிருப்போம். இயேசுவை நம்முடைய அன்றாட வாழ்க்கையின் மையமாக்காமல், தேவனோடு இரட்சிப்புக்கேதுவான உறவை நாம் பேணமுடியாது என்பதை அறிவதையும், அதற்கேற்ப செயல்படுவதையும் இது சுட்டிக்காட்டுகிறது.

இயேசுவின் விசுவாசத்தைப் பெற்றிருப்பது என்றால், இயேசுவே நம் விசுவாசத்தின் மெய்யான அடித்தளமாக இருப்பதால், அவர் நமக்குள்ளாக வாசம்பண்ணுவதன்மூலம், அவரது விசுவாசம் நமக்குள்ளாக வாசம்பண்ணுவதாகும். சில சமயங்களில் நம் விசுவாசம் பெலவீனமாக, தளர்வாக இருக்கலாம். வெளி 5:9. ஆனால் இயேசு பாத்திரராயிருக்கிறார்; விசுவாசிக்கிற அனைவருக்கும் அவர் இலவசமாக அருளுகிற கிருபையால், அவரது விசுவாசத்தை நாம் பெற்றுக்கொள்ள முடியும்; அது நம்முடைய சொந்த அனுபவத்தில் பிரதிபலிப்பதுடன், நம்முடைய விசுவாசமாகவும் எண்ணப்படுகிறது.

---

**இயேசுவின் விசுவாசத்தை எவ்வளவு தூரம் வாஞ்சிக்கிறீர்கள்? அதைத் தரும்படி தாழ்மையுடன் தேவனிடம் கேளுங்கள். மேலும், எபி 11:6ஐ உங்கள் தனிஜெப மாக்கி, பின்வருமாறு ஜெபியுங்கள்: 'ஆண்டவரே, விசுவாசமில்லாமல் உமக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம். நான் உம்மிடத்தில் வருகிறேன்; நீர் இருக்கிறீர் என்றும், உம்மை உண்மையாய்த் தேடுகிறவர்களுக்கு நீர் பலன் அளிக்கிறவர் என்றும் விசுவாசிக்கிறேன். இப்போதே விசுவாசிக்கிறேன்'.**

# மேலும் படிக்க:

நாம் விசுவாசத்தால் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம். அதாவது, மன்னிக்கப்பட்டு, தேவனுக்குமுன் குற்றமில்லாதவர்கள்போல எண்ணப்படுகிறோம். ரோமர் 5:1. பிறகு விசுவாசத்தால் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம். அதாவது, இயேசுவைப்போல வாழ நமக்கு வல்லமை அளிக்கப்படுகிறது. அப் 26:18. நாம் இயேசுவை நம் வாழ்க்கைக்குள் அழைக்கும்போது, விசுவாசத்தால் தேவனுடைய பிள்ளைகளாகவும் மாறுகிறோம். யோவான் 1:12. தேவ குமாரனில் வைக்கிற விசுவாசத்தால் வாழ்கிறோம். கலா 2:20.

'தன்னால் ஒன்றும் முடியாது என்பதை உணர்ந்து, இரட்சகருடைய புண்ணியங்களை மட்டுமே முழுமையாகச் சார்ந்திருக்கும் ஓர் ஆத்துமாவைவிட, வெளிப்பார்வைக்குப் பெலமற்றதாகத் தோன்றினாலும், உண்மையில் எவராலும் வெல்லமுடியாத ஒன்று வேறெதுவும் இல்லை'.

'தேவனை முழுமையாகச் சார்ந்திருக்கவும், தடையின்றி அர்ப்பணிக்கவும் தூண்டுகின்ற விசுவாசத்தோடு ஊக்கமாகவும் உறுதியாகவும் தேவனிடம் வைக்கப்படுகிற வேண்டுதல்மட்டுமே, துரைத்தனங்கள், அதிகாரங்கள், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகள் மற்றும் வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோ டுள்ள இந்தப் போராட்டத்தில் பரிசுத்த ஆவியானவரின் உதவியைப் பெற்றுத்தர முடியும்'.

---

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *சத்துருவுக்கு எதிரான போராட்டத்தில் பரிசுத்த ஆவியானவருடன் ஒத்துழைப்பது பற்றி, மேலுள்ள இரண்டாவது மேற்கோளில் வலியுறுத்தப்படுகிற ஐந்து முக்கியக் கருத்துகள் என்ன?*
2. *தீமைக்கு எதிரான போரில் விசுவாசம் என்ன பங்காற்றுகிறது?*
3. *உங்கள் சொந்த வாழ்க்கையில் இந்தப் போராட்டத்தை எவ்வாறு காணமுடிகிறது?*
3. *நம் விசுவாசத்தை அறிக்கையிடுவதில் உறுதியாகத் தரித்திருப்பது ஏன் முக்கியம்? எபி 10:23.*
3. *நீங்கள் உதவியற்ற நிலையில் இருப்பதாக உணரும்போது, அது இயேசுவை இன்னும் முழுமையாகச் சார்ந்திருப்பதற்கான ஒரு வாய்ப்பு என்கிற உண்மையை எவ்வளவுக்கு அடிக்கடி சிந்தித்துப் பார்க்கிறீர்கள்?*

**பாடச்சுருக்கம்:** தம்மோடுள்ள உறவுக்கு அஸ்திபாரமாக, ஒவ்வொருவருக்கும் ஒரு குறிப்பிட்ட அளவு விசுவாசத்தை தேவன் அளிக்கிறார். நமது விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய இயேசு, நம் அனைவருக்கும் விசுவாசத்தின் வல்லமைக்கு உதாரணமாக வாழ்ந்து காட்டினார். நம்முடைய விசுவாசம் சிறியதாக இருக்கும்போது, நாம் கண்ணீரோடும் விண்ணப்பத்தோடும் முற்றிலும் அர்ப்பணித்த இதயத்தோடும் அவரிடம் வரும்போது, தேவன் நம் வாழ்வில் அற்புதங்களைச் செய்வார். எரே 31:2-4,9,11,12. நாம் இனிமேல் இடறாதபடி அவர் நம்மைத் தமது நேர்த்தியான வழிகளில் நடத்துவார், அப்போது நமக்குச் சமாதானம் கிடைக்கும். இயேசுவே சகலத்திலும் பரிபூரண முன்மாதிரியாக இருக்கிறார்; அவருடைய விசுவாசத்தைப் பெற்றிருப்பதே முடிவுக்காலத்தில் நம்மை அவருடைய ஜனங்களாக அடையாளப்படுத்தும்.

# ஒளிந்துகொள்ள சோலூசிக்குச் செல்லுதல்

ஜிம்பாப்வேயில் உள்ள செவந்த்–டே அட்வென்டிஸ்ட் கல்வி நிறுவனமான சோலூசி பல்கலைக்கழகத்திற்கு லிண்ட்சே சென்றது அவரது விசுவாசத்திற்காக அல்ல. அவர் ஒரு அட்வென்டிஸ்ட் கிடையாது. அங்கு நண்பர்கள் இருந்ததாலும் அவர் செல்லவில்லை. அந்த வளாகத்தில் அவருக்கு யாரையுமே தெரியாது. ஒரு பொய்யில் சிக்கிக்கொள்ளக்கூடாது என்பதற்காகவே அவர் சோலூசிக்குச் சென்றார்.

லிண்ட்சே உயர்நிலைப்பள்ளியை முடித்ததும், பல்கலைக்கழகத்தில் படிக்க ஆசைப்பட்டார். ஆனால் அவரது பெற்றோரோ தங்களிடம் பணம் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். "தாமதமானாலும்கூட நீ கண்டிப்பாக பல்கலைக்கழகத்திற்குச் செல்வாய் என்பது உறுதி" என்று அவரது அம்மா சொன்னார். அவரது அம்மா ஒரு தையல்காரர், அவர் தயாரித்த ஆடைகள், திரைச்சீலைகள் மற்றும் சோபா உறைகளை அவரது தந்தை விற்பனை செய்து வந்தார். ஆனால் லிண்ட்சே உயர்நிலைப் பள்ளியை முடித்தபோது அந்தத் தொழில் சரியாக நடக்கவில்லை, அதனால் அவரது பெற்றோர் போட்ஸ்வானாவிற்கு குடிபெயர முடிவு செய்தனர். அவரது அப்பா லிண்ட்சேவை உற்சாகப்படுத்தினார். "நிலைமை சரியாகும்" என்று கூறினார். அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு லிண்ட்சே தனது குடும்பத் தொழிலில் உதவியாக இருந்தார். இதற்கிடையில் ஜிம்பாப்வேயிலிருந்து அவரது பழைய நண்பர்கள் அவரை அழைத்து, நலம் விசாரித்தனர்.

"உன் வாழ்க்கை எப்படிப் போகிறது?" என்று அவர்கள் கேட்டார்கள். "நானும் உங்களைப்போலவே படித்துக் கொண்டிருக்கிறேன்" என்று பதிலளித்தாள். காலம் செல்லச் செல்ல, பல்கலைக்கழகத்திற்குச் செல்லவேண்டும் என்கிற தனது கனவை அவள் கிட்டத்தட்டக் கைவிட்டுவிட்டாள். ஆனால், மெல்லமெல்ல அவளுடைய அம்மாவின் தொழில் முன்னேற்றமடைந்தது. அதிக வாடிக்கையாளர்கள் வந்தனர், ஒரு கடையையும் திறந்தார்கள். ஒருநாள், அவளது அம்மாவும் அப்பாவும் லிண்ட்சேயை அழைத்து, அவள் தனது படிப்பைத் தொடர ஏதாவது பல்கலைக்கழகத்தைத் தேடும்படி சந்தோஷமாகச் சொன்னார்கள்.

லிண்ட்சேவுக்கு பரவசமடைந்தாள், ஆனால் எங்கு செல்வது என்று தெரியவில்லை. ஜிம்பாப்வே பல்கலைக்கழகத்தைப்பற்றி யோசித்தாள், ஆனால் அங்கு அவளது நண்பர்கள் படித்துக்கொண்டிருந்தார்கள்; தான் இத்தனை காலம் படிக்கவில்லை என்பது அவர்களுக்குத்தெரிந்துவிடக்கூடாதுஎன்றுநினைத்தாள்.மிட்லாண்ட்ஸ்ஸ்டேட்பல்கலைக்கழகத்திலும் அவளது நண்பர்கள் இருந்தார்கள். ஒரே ஒரு இடத்தைத் தவிர மற்ற எல்லா பல்கலைக்கழகங்களிலும் அவளுக்கு நண்பர்கள் இருந்தார்கள்: அது சோலூசி. எனவே, அவள் அங்கு செல்ல முடிவுசெய்தாள். லிண்ட்சே அங்கு சென்றபோது, அட்வென்டிஸ்ட் சபையைப்பற்றி அவளுக்கு எதுவும் தெரியாது. ஆனாலும் ஒவ்வொரு ஓய்வுநாளிலும் ஆலயத்திற்குச் சென்றாள், எட்டு மாதங்களுக்குப் பிறகு ஞானஸ்நானம் பெற்றாள். இயேசுவுக்காக வாழவேண்டும் என்ற அவள் முடிவெடுத்தபோது, அவளது பெற்றோரும் கொண்டாடி மகிழ்ந்தனர்.



இன்று, லிண்ட்சே சிகண்டாவுக்கு **24** வயது. தனது முதலாம் ஆண்டு படிப்பை முடிக்கும் நிலையில் உள்ளார். இப்போது அவர் தனது உயர்நிலைப் பள்ளி நண்பர்களிடம் உண்மையைச் சொல்லத் தயாராக இருக்கிறார்.